# ஆன் ஸலிவன்

## ஹெலன்  கெலரின் ஆசிரியர்

ஓவியர் லிடியா ரோஸியர்

மொழி  பெயர்ப்பு

அனுமிதா



மேரி மலோன்
எழுதிய

ஆன் ஸலிவன்
**வாழ்க்கை
வரலாறு**



# புத்தகக் குறிப்பு

சிறிய பருவத்திலேயே ஆன் ஸலிவனின் கண்கள் மிக மோசமான நிலையில் இருந்தன. படிக்க முடியாதலால் ப்ரெய்லி கற்றுக் கொண்டாள். வைத்தியர்கள் அவளுடைய கண்களை சரிப்டுத்திய பிறகு தனக்குக் கிடைத்த புத்தகங்கள் யாவற்றையும் படித்தாள். பார்க்கவும், கேட்கவும் இயலாத ஹெலன் கெலர் என்ற சிறுமிக்கு ஆசிரியரானார். ஹெலனுடன் பேசுவது மிகக் கடினமாகவே இருந்த போதும் ஆன் அதை சமாளித்தாள். ஒரு சிறந்த ஆசிரியராக ,ஆன் இருந்ததால் ஹெலன கெலர் ஒரு அழகான, கெட்டிக்கார பெண்ணாக வளரமுடிந்தது.

பாழடைந்த ஒரு கட்டிடத்திற்கு முன்பு குதிரை வண்டி ஒன்று நின்றது. அதிலிருந்து பத்து வயது சிறுமி ஆன் சலைவனும், அவளுடைய ஆறுவயது சகொதரன் ஜிம்மியும் இறங்கினார்கள். சூரிய வெளிச்சம் கூசவே ஏறக்குறைய குருடான ஆன் கண்ணை சிமிட்டிக் கொண்டிருந்தாள்; பார்க்க முடிந்த ஜிம்மயோ ஒரு நொண்டி.

நாம் எங்கே இருக்கிறோம் என்று ஆன் கேட்டாள். மாஸசூஸெட்ஸில் இருக்கும் ட்யூக்ஸ்பெரி என்ற ஏழைகளின் இல்லம் அது. குடும்ப்பதினர் வேறொருவரும் இல்லாத இந்த இரு குழந்தைகளும் அங்கு வசிக்க வந்திறங்கினார்கள்.



ஜிம்மியின் கையை விடாமல் ஆன் கெட்டியாக பிடித்துக்கொண்டாள். ஒரு நாற்காலி, மேஜ மற்றும் கட்டில் இருந்த சிறு அறைக்குள் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்று ஜிம்மி தன் சகோதரியிடம் சொன்னான்.



அந்த காலத்தில் ட்யூக்ஸ்பெரி போன்ற இடங்களில் பல ஏழை மனிதர்கள் வசித்து வந்தார்கள். எல்லா வயதினரும் கும்பலாக இருந்தனர்; சிலர் வயதானவர்களாகவும், மற்றும் சிலர் நொண்டி அல்லது பார்வையற்றவர்களாகவும் இருந்தார்கள்.



ஜிம்மி சிறுவயதிலிருந்தே அவ்வளவு ஆரோக்கியமான குழந்தை இல்லை; தன் சகோதரியுடன் இங்கு வந்த சில மாதங்களிலேயே இறந்துவிட்டதால் ஆன் மிகவும் அழுதாள் – இப்பொது அவள் ஒரு அநாதை.






ஆன் உற்சாகமாகவும், கெட்டிக்காரியாகவும் இருந்ததால் அவளை ட்யூக்ஸ்பெரியில் இருந்தவர்களுக்குப் பிடித்துவிட்டது. கருங் கூந்தலுடன் நேசமான புன்னகயுடன் இருந்த ஆன் ஒரு அழகிய பெண்ணாக வளர்ந்தாள். அங்கு இருந்த அவளுடடைய சிநேகிதர்கள் குருடர்களுக்கான பள்ளி ஒன்று இருப்பதாக அவளுக்குத் தெரிவித்தார்கள். வாய்ப்பு கிடைத்தால், தான் படிக்க முடியும் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது.

ஒரு நாள் சிலமுக்கியமான
நபர்கள் அந்த ஏழை
இல்லத்திற்கு வந்தார்க்ள. ஆன்
ஆர்வத்துடன்
ஓ டி வந்து தான் கற்றுக் கொள்ள
விரும்புவதாகஅவர்களிடம்
கூறினாள்; அதில் ஒருவர்
அவளுக்கு உதவுவதாக
உறுதியளித்தார். வெகு
சீக்கிரத்திலேயே, ஆன்
பாஸ்டனில் உள்ள பெர்கின்ஸ்
நிறுவனத்திற்குப் போவதற்குத்
தயாராக சொன்னார்கள்.





ஆன் புகழ்பெற்ற இந்த நிறுவனத்தைப்
பற்றி கேள்விப்பட்டிருந்தாள்.
கண்ணில்லாதவர்களுக்கான
பிரத்யேகமான நிறுவனம் அது. அங்கு,
பேசவும் பார்க்கவும், கேட்கவும் இயலாத
லாராபிரிட்ஜ்மென் என்ற பெண்
ஒருவளுக்கு டாக்டர் சாமுவெல் க்ர்ட்லி
ஹோவ் என்பவர் கற்றுகொடுத்தார்.
தான் சொல்ல வேண்டியதை
மற்றவர்கள் கையில்,
எழுத்துக்களாகவும், வார்த்தைகளாகவும்
வரைந்து புரியவைத்தார்; அவர்களும்
அதே மாதிரி அவருடன் பேசினார்கள்.
டாக்டர் ஹோவ் இறந்துவிட்டார்;
பெர்கின்ஸில் வசித்துவந்த லாரா
பிரிட்ஜ்மெனும் முதுமை
அடைந்துவிட்டார்.




மிக உற்சாகமாக இருந்த, ஆன் புதிய ஆடைகள் அணிந்துக்கொண்டு பாஸ்டன் போகும் ரயிலில் ஏறினாள். ஆடை மிக குறுகியதாகவும், உயர் காலனிகள் மிகவும் இறுக்கமாகவும் இருந்தன. அந்த ஏழை இல்லத்திற்கு நாலு ஆண்டுகளுக்கு முன்பு வந்த பதினாலு வயதான ஆன், அந்த இடத்தை விட்டு போவதில் மகிழ்ச்சியடைந்தாள்.

பெர்கின்ஸ் நிறுவனத்தில் அவள் வாழ்க்கை எளிதாக இல்லை. பெரும்பாலும் பணக்கார குடும்பங்க்களிலிருந்து வந்த அவர்கள், ஏழ்மை இல்லத்திலிருந்து வந்தவளை சினேக பாவத்துடன் வரவேற்கவில்லை. அவள் கட்டுக்கடங்காமல், சில சமயங்களில் நயமில்லாமலும், நடந்துக் கொள்கிறாள் என்று நினைத்தார்கள்.



ஆன், ஆரம்பத்தில் அவளைவிட இவயதினர் வகுப்பில் சேர்க்கப்பட்டாள். ஆனால் விரைவில், அந்த வகுப்பு தரத்திற்கு தன்னை விருத்தி செய்துக் கொண்டாள்; பிறகு தன் வயது குழந்தைகளுடன் படிக்கத் தொடங்கியதும் அவளுக்குப் பள்ளிகூடம் மிகவும் பிடித்துவிட்டது

பார்வையற்றவர்களுக்கான ப்ரெய்ல் என்பபடும் எழுத்து முறையைக் கற்றுக்கொள்ள ஆன் மிகவும் கடுமையாக உழைத்தாள். இது, பார்வையற்றவர்கள் உணர்வால் தொட்டு புரிந்துக்கொள்ளும் எழுத்துமுறை.



பிறகு, கண் அறுவை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அவள் அனுப்பப்பட்டாள். இந்த சிகிச்சைக்குப் பிறகு அவளால் நன்றாகப் பார்க்கமுடிந்தது. விரைவில், கண்ணாலும், விரல்கள் மூலமும் அவளால் படிக்கமுடிந்தது. தன கையில் கிடைத்த எல்லா புத்தகங்க்களையும், பொதுவாக இரவில், வெகு நேரம் படிப்பாள். அவள் கண்கள் ஒருபோதும் முழு குணமடைய வாய்ப்பில்லை என்று அறிந்த டாக்டர்கள் அவளை கவனமாக இருக்கச்சொல்லி எச்சரித்தார்கள். ஆனால் தான் அறிய வேண்டியது எவ்வளவோ இருக்கிறதே என்று தன் கண்கள் பாதிக்கப்பட்டாலும் படித்தாள்.



இருபது வயதில், வகுப்பில் முதல் இடம் பிடித்து ஆன் பெர்கின்ஸில் பட்டம் பெற்றாள். அவளுடைய ஆசிரியர்களில் ஒருவர் அழகான வெள்ளை உடை ஒன்று அவளுக்கு தயார் செய்தார். அந்த ஆடையை மிகுந்தபெருமையுடன் ஆன் அணிந்திருந்தாள். பட்டம்பெற்ற அந்த நாள் தன் வாழ்க்கையிலேயே அவளுக்கு மிக்க மகிழ்ச்சியான நாள். பெர்கின்ஸ் நிறுவனத்தில் தேர்ச்சி பெற்ற பிறகு உடனடியாக வேலைவாய்ப்பும் கிடைத்தது. அலபாமாவில், டஸ்கம்பியாவில் வசித்து வந்த கேப்டனும், திருமதி கெல்லரும் தங்கள் இளம் மகள் ஹெலனுக்கு ஒரு ஆசிரியரைத் தேடிக்கொண்டிருந்தனர். ஆறு வயதான அவளுக்குப் பார்க்கவோ, கேட்கவோ, பேசவோ முடியாது. பிறவியிலேயே அவள் அப்படி இல்லை. ஆனால் இரண்டு வயதாக இருந்த போது, நோய்வாய்ப்பட்டு பார்க்கவும், பேசவும் முடியாமல் பார்வையையும் இழந்துவிட்டாள். இப்போதுஹெலனின் வாழ்க்கை இருண்டிருந்தது. அவருடன் யாரும் தொடர்புகொள்ள முடியவில்லை. அவளுடைய பெற்றோருக்கும் ஹெலனின் எதிர்காலம் பற்றி மிகவும் கவலையாக இருந்தது.



**தொலை பேசியைக் கண்டுபிடித்த அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் என்பவரிடம் அவள் பெற்றோர்கள் அவளை அழைத்துச்சென்றார்கள். அவர் செவிட்டு தன்மையை நன்றாக புரிந்துக் கொண்டவர்.**

ஹெலன் புத்திசாலி என்றும், பெர்கின்ஸ் நிறுவனத்திற்குக் கடிதம் எழுதும்படியும் அறிவுரை தந்தார். உடனே கடிதமும் எழுதப்பட்டது; சுலைவன் அவளுக்கு ஆசிரியராக வருவாள் என்ற பதிலும் சீக்கிரமே கிடைத்தது.



ஆன் வேலை கிடைத்ததில்
மிழ்ச்சியடைந்தாள். இளமையாகவும்
வலிமையாகவும் இருந்ததுடன் அவள்
மிக தைரியத்துடன் இருந்தாள்.
முக்கியமாக, குருடாக இருப்பது
என்னவென்றும் அவள் நன்றாகவே
உணர்ந்திருந்தாள்.

ஹெலனின் சிக்கலான நிலை
பிரிட்ஜ்மென் நிலையைப் போன்றது.
அதனால், லாரா பிரிட்ஜ்மென் பற்றி
டாக்டர் ஹோவின் குறிப்புகளை ஆன்
முதலில் படித்தார். தன்னுடைய வேலை
எவ்வளவு கடினமானது என்று
அவளுக்குப் புரிந்ததால் பிரிட்ஜ்மென்
பற்றிய விவரங்களை தெரிந்து கொண்டு
பிறகு சந்திக்கச் சென்றார். இருவரும்
ஒருவருக்கொருவர் உள்ளங்கையில்
தட்டு பாஷைமூலம் உரையாடினார்கள்
.வயதான லாரா பிரிட்ஜ்மென் இளைய
ஹெலன் கெல்லர் மீது ஆர்வம் காட்டி,
ஆன் மூலம் ஒரு பொம்மையையும்
அவளுக்குக் கொடுத்து அனுப்பினார்.



நீண்டபயணத்திற்குப்பிறகு,ஆன், மிக்கசோர்வுடன் அலபாமாவில் டஸ்கும்பியாஎன்ற இடத்தை வந்தடைந்தாள்; தன் வீட்டின் நினைவாகவே இருந்தாள்.ரயில் பயணத்தின் நிலக்கரி சாம்பலால் அவள் கண்கள் இரண்டும் சிவந்திருந்தன. கேப்டனும், திருமதி கெல்லரும் அவளை அழைத்துச் செல்ல ஸ்டேஷனிற்கு வந்திருந்தார்கள். கடந்த இரண்டு நாட்களாக ஒவ்வொரு ரயிலிலும் அவள்வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவர்கள், அவளை பார்த்ததும் மிக்க மகிழ்ச்சியடைந்தாரகள்.



வீட்டில் காத்துக்கொண்டிருந்த ஹெலன் கெலர் இனம் தெரியாத ஏதோ ஒன்று நடக்கப் போவது என்று மட்டும் உணர்ந்தாள். ஹெலனை பார்த்ததுமே, அவள் தடமற்று சோகமாக இருப்பதை ஆன் புரிந்துகொண்டாள். அந்த இருண்ட வாழ்க்கையிலிருந்து ஒரு நாள் தன்னால் ஹெலனை வெளியேற்றமுடியும் என்ற நம்பிக்கையுடன் ஆன் இருந்தாள்.





முழு குடும்பமும் பரிதாபத்துடன் மட்டுமே ஹெலனைப் பார்த்ததால் கேப்டனும், திருமதி கெல்லரும் ஹெலனுக்கு எந்த பயிற்சியும் கொடுக்கவில்லை என்று ஆன் விரைவிலேயே புரிந்து கொண்டுவிட்டாள். ஹெலனை மகிழ்விக்க அவர்கள் எதையும் செய்தனர். ஹெலன் எதை வேண்டுமானாலும் பிடிங்கிக் கொள்வாள், விருந்தினர்களின் தட்டிலிருக்கும் உணவை சாப்பிடுவது உள்பட. அவளைப் பார்த்து வருத்தமடைந்த ஆன், ஹெலனை

குடும்பத்துடன் முதல்முதலில் உணவு சாப்பிடும் போது, ஹெலனுக்கு அருகில் ஆன் அமர்ந்தாள். ஹெலன் தன் வாயில் சாப்பாட்டை திணித்துக் கொள்வதைப் பார்த்து, அவளை தடுத்தாள். இதைக்கண்டு மிகவும் ஆச்சரியமடைந்த ஹெலன், கோபம் கொண்டு, தன் கால்களைத் தரையில் ஓங்கி மிதித்தாள். மற்ற குடும்பத்தினர்களை அறையை விட்டு வெளியேற சொல்லி ஹெலன் ஓடாதபடி அறை மூடப்பட்டதும் அவள் கதவை உதைத்தாள்; ஆனை அடித்துத் தாக்கவும்ஓடினாள்; கத்தினாள், தரையில் விழுந்து உருண்டாள்.

ஆனால், ஆன் ஹெலனை அவளுடைய நாற்காலியில் கட்டாயப்படுத்தி உட்காரவைத்து, அவளுடைய தட்டில் இருந்த ஸ்பூன், நாப்கின் இவைகைளைப் பயன்படுத்தி சாப்பிட கற்றுக் கொடுத்தாள். பல நேரங்களுக்குப் பிறகே, ஹெலன், ஆன் சொல்லுக்குக் கீழ்படிந்தாள். இதற்குள் மிக சோர்வடைந்துவிட்டாள். பின்னர் கதவை திறந்து ஹெலனை போக சொல்லிவிட்டு தனது அறைக்குச் சென்றுபடுக்கையில் விழுந்து அழ ஆரம்பித்தாள்.



நிலமையின் சிக்கலை ஆன் சீக்கிரமே புரிந்துக் கொண்டாள். முதலில் ஹெலனை அ வள் குடும்பத்திலிருந்து பிரித்து வெளியே அழைத்துச் செல்லவேண்டும் என்றும், தன்னுடன் தனியாக இருக்கக் கற்றுக்கொண்டால் தான் அவள் தான் சொல்வதைக் கேட்பாள் என்றும் தீர்மானித்தாள். அடுத்த நாள் ஆன் கேப்டனையும், திருமதி கெல்லரையும் அணுகி ஹெலனுடன் தனியாக சில நாட்கள் வெளியில் இருப்பதற்கு அனுமதி கேட்டபோது கெல்லருக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை. ஹெலனை கட்டுப்படுத்த ஒரேவழி இதுதான் என்று ஆன் சொல்லவும், இறுதியில் அவர் அந்த திட்டத்திற்கு ஒத்துக் கொண்டார்.





ஆன்ஹெலனின் வீட்டிற்கு அருகில் இருந்த ஒரு சிறிய ‘காட்டேஜ்’–கு சென்றாள். ஆரம்பத்தில், ஆன் போட்ட திட்டம் பலன் அளிக்கவில்லை. ஹெலன் ஒருபோதும் அவளை தொடுவத்ற்கு அனுமதிக்கவில்லை.ஹெலனை தூங்க படுததுவதற்கு மிகவும் போராட வேண்டியிருந்தது. இறுதியாக சோர்வடைந்து ஹெலன் தூங்குவாள். காலையில் துணிகளை அணிவதற்குக் கொடுத்தால் தூக்கி எறிந்து விடுவாள. அவள் துணிகளை மாற்றிக்கொள்ளும் வரை காலை சிற்றுண்டி கிடைக்காது. இந்த போராட்டம் பல நாட்கள் நடந்துக் கொண்டிருந்தது.



ஹெலன் பலசாலியாகவும், பிடிவாதகாரியாகவும் இருந்தாள் என்றால் ஆன் அவளை விடவும் வலிமையாகவும், அவளை போலவே பிடிவாதத்துடன் எதிர்கொண்டாள்.



கேப்டன் கெல்லர் ஒரு நாள் காலையில் வந்து ஜன்னல் வழியாக அவர்கள் இருவரையும் எட்டிப்பார்த்தா ஹெலன், நைட் கௌன் அணிந்து தரையில்உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார். இதனால் அவர் கோபப்படுவார் என்பதை ஆன்புரிந்துகொண்டாள்.அவள் நினத்தப்டியே, கேப்டன்சாஹிப் அவளை பாஸ்டனுக்கு திருப்பி அனுப்ப நினைப்பதாக ஒரு ஊழியர் கூறினார். ஆனால் ஆன் தனது திட்டத்தில் திடமாக இருந்தாள். ஹெலன் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வந்த பிறகு தான் எதையும் அவளுக்குக் கற்பிக்க முடியும் என்று ஆன் சொல்லவும், இறுதியில் அவர் அதை ஏற்றுக்கொண்டார்.



எல்லாவற்றிற்குமே ஹெலனுடன் போராட வேனண்டியிருந்தது. ஆன் அவளின் உள்ளங்கையில் தட்டி எழுத்துகளைக் கூட்டி கற்றுக் கொடுத்தாள். விரைவில் ஹெலன் அந்த வார்த்தைகளைக் கற்றுக் கொண்டாலும் இன்னு ஒவ்வொன்றிற்கும் , தனி பெயர் இருக்கிறது என்றும், அவைகளை சொற்கள் மூலம் தெரியப்படுத்தலாம் என்றோ, அந்த சொற்கள் ஒன்றிணைந்து வாக்கியங்களை உருவாக்குகின்றன என்றோ அறிந்துக் கொள்ளவில்லை.





இறுதியாக ஹெலன் தன் நடைமுறையைத் திருத்திக் கொண்டு முன்னேறினாள். அவள் முன் போல் காட்டுமிராண்டித்தனமாகவோ, முரட்டுத்தனமாகவோ இல்லை என்றும் அவளைத் தொட்டு மடியிலும் கூட வைத்துக் கொள்ள முடியும் என்றும் ஆன் தன் நாட்குறிப்பில் எழுதினாள்.

இரண்டுவாரங்களுக்குப் பிறகு, ஹெலனும், ஆனும் பெரியவீட்டிற்குத் திரும்பினார்கள். கெல்லர் தம்பதியினர், ஹெலனின் மாற்றத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். அமைதியாக உட்கார்ந்து தனது பொம்மைகளுடன் அவள் விளயாடினாள். ஹெலனுடன்பேசுவதற்குக் குடும்ப உறுப்பினர்களுக்கும் ஆன் விரல்களால்எழுத கற்றுக்கொடுத்தாள்.



அப்போது, அலபாமவில் இனிமையான வசந்த காலம்; இருவரும் தங்கள் நேரத்தை பெரும்பாலும் வெளியிலேயே கழித்தனர். பண்ணையில் இருந்த வீட்டு விலங்குகளைப் பார்ப்பதும், மணிகணக்கில் சுற்றி இருந்த காடுகளில் திரிந்துக் கொண்டும் இருந்தனர். அதே சமயத்தில் பல விஷயங்களை, தொட்டும், நுகர்ந்தும் அடையாளம் தெரிந்துக்கொள்ள, ஆன், ஹெலனை பழக்கினாள். கூடவே தன்னுடயை விரலகளால் தொடர்ந்து ஹெலனின் கையில் தட்டி அந்த வார்த்தைகளையும் கற்றுக் கொடுத்தாள். ஹெலன், அவ்வப்போது, பொருட்களை, அதன் பேர்களுடன் இணைப்பதில் குழம்பி போனாள்..



உதாரணமாக ‘குவளை’, நீர்’ என்கிற இரண்டு வார்த்தைகள் அவளுக்குக் குழப்பத்தை தந்தது. அதை தெளிவுபடுத்த ஆன் ஒரு யுக்தியைக் கையாண்டாள். ஹெலனை வெளியில் ‘ஹேண்ட் பம்ப்’ இருந்த இடத்திற்கு அழைத்து சென்று, அவளிடம் ஒரு குவளையைக் கொடுத்த பிறகு தண்ணீரை பம்ப் செய்ய தொடங்கினாள்; குழாயிலிருந்து வெளியேறிய குளிர்ந்த நீர் ஹெலனின் கையில் வழிய தொடங்கிய அதே சமயம் அவள் உள்ளங்கையில் ‘நீர்’ என்று எழுதினாள்.

திடீரென்று, ஹெலனின்மாறிய  முகம்,  முதல் முறையாக மலர்ந்தது."நீர்" என்று  தானே  பல முறைகள் எழுதினாள். பம்ப் மற்றும் தரையை சுட்டிக்காட்டி அ வைகளின் பெயர்களையும் கேட்டாள்.  விரைவாக ஆன் அந்த வார்த்தைகளை ஹெலனின் உள்ளங்கையில் எழுதினாள். இப்போதுதான்  முதன் முறையாக ஹெலன் தான் தொட்ட  விஷயத்தின் பெயரை அறிந்துக் கொள்ள  ஆர்வமாக இருந்தாள்.



முப்பது புதிய சொற்களை  குறுகிய காலத்தில் கற்றுக் கொண்டுவிட்டாள் என ஆன்  அடைந்த மகிழ்ச்சிக்கு  அளவேயில்லை. அவ்ள, ஹெலனின்இதயத்தைத்தொட்டு,  அதன் இருளைக்  கிழித்து  விட்டோம்  என்று உணர்ந்தாள்.  தன்னைச் சுற்றியுள்ள உலகத்தை ஹெலன்  புரிந்துகொள்ள, ஆன்  அவளிடம் மொழியின் திறவுகோல்  என்னும்  ஒரு சாவியைக்  கொடுத்துவிட்டாள்.



ஹெலன் தன் பெயரைக் கேட்ட போது, ஆன் ‘டீச்சர்’ என்று அவள் கையில் எழுதினாள். அப்போதிலிருந்து எப்போதுமே ஹெலனுக்கு அவள் ‘டீச்சர்’ என்றாயிற்று.

அன்றிரவு ஹெலன் அவளைக் கட்டி முத்தம் கொடுத்தாள். அவள் தன்னை விரும்புகிறாள் என்று தெரிந்ததும் ஆன் மிக்க மகிழ்ச்சி அடைந்தாள். தன் வாழ்க்கையை ஹெலனுக்கு உதவுவதிலேயே கழிக்க விரும்பினாள்.



தன்னுடைய வேலையின் முதல் படியைத் தாண்டிவிட்டோம் என்று ஆன் உணர்ந்துக் கொண்டாள். அடுத்துவந்த சில வருடங்கள் அவளுக்கு வீட்டிலேயே பாடம் கற்றுக் கொடுத்தாள். ஹெலன், ஆவலுடனும் கற்றுக்கொள்ளும் புத்திசாலி என்பதால், நன்றாக முன்னேறிவிடுவாள் என்றும் புரிந்துக் கொண்டாள்.

வேறு சிலரிடமிருந்தும் ஹெலன் மேலும் பல விஷயங்களை அறிந்துக் கொள்ளமுடியும் என்று நம்பிய ஆன், மேற் கொண்டு படிப்பதற்கு பெர்கின்ஸ் நிறுவனத்திற்கு அவளை அழைத்து செல்வதற்கு கெல்லர் தம்பதிகளிடம் அனுமதி கேட்டாள். ஆனிடம் இருந்த முழு நம்பிக்கையினால் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள்

பெர்கின்ஸில், ஆன் எப்பபோதும் ஹெலன் கூடவே இருந்துஅவளுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தாள் .மற்றவர்களுடன் எப்படி பேச வேண்டும் என்றும் மற்றவர்கள் பேசுவதை எப்படி புரிந்துக் கொள்ள வெண்டும் என்றும் சொல்லி கொடுத்தாள்.

பேசுபவர்களின் உதட்டிலும், மூக்கிலும், தொண்டையிலும் ஹெலன் தன் ஒரு கை விரல்களை வைத்து ஒலியின் அதிர்வுகள் மூலம் யூகித்து வார்த்தைகளை அறிந்துக் கொண்டாள்.

ஹெலன் கெல்லரைப் பற்றி உலகம் முழுவதும் கேள்விபட்டு அவளை சந்திக்க பலர் வந்தனர். அதன் மூலம் ஆன் புகழும் பரவியது, அவளுக்குப் பல புதிய வேலை வாய்ப்புகளும் கிடைததன; ஆனால் அவள் ஒரு போதும் ஹெலன் கெல்லரை விட்டு வெளியேற நினைக்கவில்லை. கேப்டன் கெல்லர் இறந்துவிட்டார்; திருமதி கெல்லர் தனது மகள்ஹெலனை அவள் பொறுப்பில் விட்டு விட்டார்.







ஹெலன் கல்லூரிக்குசென்ற போது, ஆன் அவள் கூடவே எல்லா வகுப்புகளுக்கும் சென்று, ஹெலன் கற்றுக் கொள்ள வேண்டிய அனைத்தையும் படித்து புரிந்து கொள்ள வேண்டியிருந்தது. அதிகம் படிக்க வேண்டியிருந்ததால் அவள் கண் உபாதை அதிகரித்தது. பட்டமளிப்பு நாளன்று ஹெலன் கூடவே ஆன் மேடையில் இருந்தாள்.

இப்போது ஒரு அழகான இளம் பெண்ணாக வளந்திருந்த தனது மாணவியைப் பார்த்து அவள் பெருமைப்பட்டாள்

ஹெலன், பட்ட படிப்பை முடித்த பிறகு தொடர்ந்து வந்த பல வருடங்கள், ஆன் மிக மகிழ்ச்சியுடன் இருந்தாள். அவளும், ஹெலனும் சேர்ந்து ஒரு பெரிய வீடு வாங்கினார்கள். அவர்களுக்கு சிநேகிதர்கள் அநேகம். சமைப்பது, விருந்தோம்பல் இவகளை ஆன் மிகவும் விரும்பினாள். ஜான் மேஸி என்னும் எழுத்தாளரை, அவள் மணந்துக் கொண்டாள்; அதற்கு முன்பு, ஹெலன் எப்போதும் தன்னுடன் தான் இருப்பாள், என்பதையும் சொல்லியிருந்தாள். அவர்கள் இருவரும், ஹெலன், தன் முதல் புத்தகத்தை முடிப்பதற்கு உதவினார்கள்.

‘என் வாழ்க்கையின் கதை’ யாவராலும் மிகவும் விரும்பப்பட்ட புத்தகமாக அமைந்தது .



ஆன் மிக கடுமையாக உழைத்தாள். .ஹெலன் எழுதியவைகளை அவள் படித்துத் திருத்தினாள். ஹெலன் பிரயாணம் செய்த போது, கூடவே சென்று அவள் சொல்லுவதை மற்றவர்களுக்கு விளக்கினாள். இதன் நடுவில் வீட்டு வெலையும் செய்யவேண்டியிருந்தது. ஒரு முறை அவள் நோய்வாய்ப்பட்டு குணமடைய வேறு இடம் செல்லவேண்டியிருந்தது. கண் பார்வையும் மோசமானது. ஜான் மேஸியும் விட்டுவிட்டு போய்விட்டார்.

அதன் பிறகு, ஹெலனும், ஆனும் தங்களுடைய பெரிய வீட்டை விற்றுவிட்டு ஒரு சிறிய இடத்திற்கு சென்றார்கள். கையிலோ பணமும் அவ்வளவு இல்லை. இருவருமே எப்பொதும் பணத்தை சேமிக்கவில்லை; தங்களிடம் இருந்தால் தங்களைவிட அதிகமாக தேவைப்பட்டவர்களுக்குக் கொடுத்தார்கள். குருடர்களுக்கான அமெரிக்க நிறுவனம் ஒன்றை எப்போதும் ஆதரித்தார்கள். ஹெலன் எழுதிய புத்தகத்திலிருந்து கிடைத்த வருமானத்தை முதல் உலக போரில் குருடான சிப்பாய்களுக்கு அர்பணித்தார்கள்.





முதல் உலக போர் முடிந்ததும் ஆன், ஹெலன் இருவரும் ஹாலிவுட் சென்றார்கள். ஹெலனுடைய வாழ்க்கையை படமெடுத்தார்கள். பல நகரங்களில் மேடைநிகழ்ச்சிகளும் கொடுத்தாரகள். இந்த நிகழ்ச்சிகள் பெரும் வெற்றியைப் பெற்றதுடன் வசதியாக வாழ போதுமான வருமானமும் கொடுத்தது.
இந்த சமயத்தில் ஆன் கண் மோசமாயிற்று. இருந்தும் ஹெலென் மற்றுமொரு புத்தகம் எழுதி முடிக்க உதவி செய்தாள். அதற்குள் அவளால் கண்களைப் பயன்படுத்த முடியாமல் கிட்டத்தட்ட குருடாகிவிட்டாள்.



அப்போது இவர்கள் இருவருடனும் ஸ்காட்லேந்திலிருந்து தங்க வந்திருந்த இளமையான பாலி தாம்ஸனை, ஹெலனுக்கு உதவி செய்ய ஆன் பழக்கினாள். இவள் எப்போதும் இன்முகத்துடன் இருந்தாள்.



ஆன் தனது வாழ்க்கையின் முடிவில் பல கௌரவங்களைப் பெற்றாள் .ஐம்பதுஆண்டுகள் ஹெலன் கெல்லரின் ஆசிரியராகவும், தோழராகவும் இருந்துள்ளாள். ஆன் இல்லாமல் ஹெலன் சமாளிக்க முடியாது என்று சிலர் நினைத்தார்கள். ஆனால் ஆன் அவள் நிலமையை நன்றாகவே கணித்திருந்தாள்.

ஹெலனுக்கும் புரிந்திருந்தது. “ஆசிரியர்” இறந்தபிறகு ஹெலன் பல பயனுள்ள ஆண்டுகள். ஆன்சலிவன் அவளுக்கு நன்றாகவே பயிற்சி அளித்திருந்தாள்.

# எழுத்தாளர்

ஒரு எழுத்தாளராக மேரி மலோன் சிறுகதைகள் மற்றும் பல சுயசரிதைகளை எழுதியுள்ளார். அமெரிக்காவில் ட்ரெண்டன் என்ற ஊரில் வசித்துவந்தார். இவர் எப்போதும் தன் வேலயில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்; அனைத்தும் புத்தகங்கள் மற்றும் வாசிப்பு தொடர்பானது.

ட்ரெண்டன் பள்ளிகளின் நூலகத்தின் ஒருங்கிணைப்பாளராக இருந்த இவர், இளைஞர்களுக்கான புத்தகங்களை மதிப்பாய்வுசெய்து தேர்ந்தெடுத்தார். தனது சகோதரரின் புத்தகக்கடையிலும் ஒரு உதவியாளராக அனைத்து வகையான புத்தகங்களையும் விற்றார். தவிர இளைஞர்களுக்காக ஆறு நாவல்களும், பல சுயசரிதைகளையும் எழுதியுள்ளார்.

# ஓவியர் லிடின் ரோஸியர்

ஸ்விட்சர்லாந்தில் பிறந்து, நெதர்லாந்தில் கல்விபெற்றார். அமெரிக்காவில் ஆர்ட் மாணவர்லீக் மற்றும் ஸ்கூல் ஆஃப் ஆர்ட்ஸில் படித்தார்.

பின்னர் ஒரு முன்னணி புத்தக வெளியீட்டாளரின் இயக்குனராக பணிபுரிந்தார். நிறுவனங்கள் மற்றும் தனியார் நபர்களுக்காக உருவப்படங்களும், இயற்கைக் காட்சியும் வரைந்தார்.

அவர் தனது பணிக்காக பல சிறந்த கௌரவங்களையும் விருதுகளையும் வென்றுள்ளார். குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் படங்களுடன் புத்தகங்களைப் பிரத்தியேகமாக எழுதினார்.